**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தண்டிக்கப்பட்டதாக என்னிடத்தில தகவல் இல்லை. நீதிமன்றத்தினுல் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் இருக்கிறது.

*Retrenchment of mill employees in Coimbatore.*

*448 *Q.*—THIRU **N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware of the retrenchment of employees by the mill owners of Coimbatore in April 1968 ?**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1968**-ம் ஆண்டு எப்ரல் மாதத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்களை பெருவாரியான வேலை நீக்கம் செய்வது பற்றி கோயமுத்தூர் ஆலை நிர்வாகிகளிடமிருந்து அறிக்கை எதும் வரவில்லை. அந்த மாதத்தில் பஞ்சாலைகளில் ஆட்குறைப்பு செய்யப்படவுமில்லை.

**திரு என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாலைத் தொழிலாளர்களில் இல்லாது போனுலும் கூட வேறு எந்தெந்த ஆலைகளில் ஆட்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. எத்தனை பேர்கள் ? கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி பஞ்சாலையைப் பற்றியது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, கோவையில் ஆட்குறைப்பு சம்பந்தமாக ஒன்றும் நடவடிக்கை இல்லை. ஆனுல், சிக்கனச் சேமிப்பு என்பதன் பெயரால் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலமாக தற்காலிகமாக 10 ஆண்டுகளாக இருந்தவர்களுக்கு வேலையில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அதே நேரத்தில் அந்தத் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கனம் அங்கத்தினர் கூறுவது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

THIRU **K. VINAYAKAM : May I know how many workers have been thrown out of employment, apart from retrenchment of employees by mill owners, and what steps this Government propose to take to reinstate them in the mills which should be opened after laborious negotiations between the Centre and the State ?**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி ஆட்குறைப்பு பற்றியது. அந்த மாதத்தில் ஆற்குறைப்பு எதுவும் செய்யப்படவில்லை என்று நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

**மீனுட்சியம்மன் கோவில் திருப்பணி**

* 49 வினு—**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனுட்சி அம்மன் கோவில் திருப்பணிக்கான பொது வசூல் எவ்வளவு ?

(இ) அறநிலைய இலாக்கா மூலம் கொடுக்கப்பட்ட மானியம் எவ்வளவு ?

1969 மார்ச் 24]

(உ) திருப்பணி விழாக்குழு அந்த துறையின் மூலம் சர்க்காருக்கு திருப்பித்தர வேண்டிய பாக்கி ஏதேனும் உண்டா ?

(எ) திருப்பணியின் வரவு-செலவுகளை ஆடிட் செய்யப்பட்ட ஆடிட் ரிப்போர்ட்டின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ரூ. 23,39,491·89.

(இ) இந்து சமய-அறக் கட்டளைகள் துறை மானியம் எதையும் வழங்கவில்லை.

(உ) இந்த வினு எழவில்லை.

(எ) இத்தணிக்கை அறிக்கைகள் 1371 முதல் 1375 வரையிலுள்ள பசலிகளைப் பற்றியன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் மூலம் ஏற்பட்ட பொதுவான விளைவுகள் போதிய அளவு மனநிறைவு அளிப்பவையாக கருதப்படுகின்றன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் பல பக்கங்களைக் கொண்டவை. எனவே, பேரவையில் அவற்றை வைக்க இயலவில்லை.

**THIRU N. KASIRAMAN :** Similarly when temple funds are diverted to non-governmental functions, will the Government be pleased to audit those accounts and to place the audit report before this House since temple funds are public properties and are under the control of the Government ?

**மாண்புமிகு திரு. வே. வி. சுப்பையா :** இந்த அறிக்கைகள் ஆடிட் செய்யப்படுகின்றன. ஆனுல் ஆடிட் ரிப்போர்ட் பக்கங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் வைக்க இயலவில்லை.

**திரு பெ. மலேச்சாமி :** தலைவரவர்களே, இந்தத் திருப்பணியையொட்டி நடந்த ஒரு கோபுரத்திற்கான செலவை பிர்லா அவர்கள் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அறநிலையங்கள்.**

வினு :* 450 **புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எத்தனை கோவில்கள் அறநிலைய பொறுப்பிலிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு.கே. வி. சுப்பையா :** திருச்சி மாவட்டத்தில் 1122 அறநிலையங்கள் இருக்கின்றன.

**புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் இந்தக் கோயில்களைச் சேர்ந்த சொத்துக்களிலிருந்து எவ்வளவு வருமானம் அறநிலையக் குழுவிற்குக் கிடைக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** அதுபற்றிய தகவல்கள் என்னிடத்தில் இல்லை.

**குடியிருப்பு மனைகளுக்கு பட்டா வழங்கல்.**

* 431—வினு—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், சுக்காலியூர் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தை குடியிருப்பு மனைக்காக பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?